# இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்களுக்கான தகவல் துண்டுப்பிரசுரம்



## பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்

இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு

## நிதியியல் உளவறிதல் பிரிவு என்றால் என்ன?

- 2006ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட நிதியியல் உளவறிதல் பிரிவு - இலங்கை, நிதி அமைச்சின் கீழ் சுயாதீனமான நிறுவனமொன்றாக விளங்குவதுடன், 2007ஆம் ஆண்டிலிருந்து நிருவாக ஏற்பாடுகளுக்காக இலங்கை மத்திய வங்கியின் கீழ் தொழிற்பட்டு வருகின்றது.
- இது, பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் செயற்பாடுகளுக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உச்ச நிறுவனமாகத் தொழிற்படுகின்றது.
- நிதியியல் உளவறிதல் பிரிவானது இலங்கையின் நிதியியல் சந்தையிலும் அதேபோன்று நிதியல்லா சந்தைகளிலுமுள்ள ஏனைய தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் மற்றும் உரிமம் வழங்குகின்ற நிறுவனங்கள் மற்றும் நாட்டிலுள்ள சட்டத்தினை நடைமுறைக்கிடும் முகவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன், உலகளாவிய ரீதியில் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் நியமங்கள்/ விதந்துரைப்புக்களின் காத்திரமான நடைமுறைப்படுத்தலுக்காகச் செயற்படுகின்றது.

## பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் என்றால் என்ன?

- பணம் தூயதாக்கல் என்பது குற்ற நடவடிக்கைகளிலிருந்தான பெறுகைகள், பயன்கள் அல்லது நிதியங்களின் மூலத்தினை மறைப்பதற்கு குற்றவாளிகள் முயற்சிக்கின்ற செயன்முறையொன்றாகும். அவர்கள் வழக்குத் தொடுத்தல், குற்றத் தீர்ப்பளித்தல் அல்லது குற்றவியல் நிதியங்கள் அல்லது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுவதனைத் தவிர்ப்பதற்காக குற்றங்களுடன் தொடர்புபட்ட பெறுகைகளை தூயதாக்கும் செயன்முறையில் ஈடுபடுகின்றனர்.
- பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் என்பது பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக தனிப்பட்டவர்களுக்கு அத்துடன்/ அல்லது குழுவினருக்கு நிதியியல் உதவியினை வழங்குகின்றதொரு நடவடிக்கையாகும். பயங்கரவாதத்திற்கான நிதியளிப்பினை சட்ட ரீதியான, சட்ட ரீதியற்ற அல்லது இரண்டும் இணைந்த பல்வேறு வகையான மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

## பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் என்பனவற்றிற்கிடையிலான வேறுபாடு என்ன?

- பணம் தூயதாக்கலில் நிதியிடல் மூலங்கள் எப்பொழுதும் சட்டத்திற்கு மாறானதாகவும் குற்றவியல் நடவடிக்கையுடன் தொடர்புபட்டதாகவுமே இருக்கின்றன. பணம் தூயதாக்கலின் குறிக்கோள் யாதெனில் சட்டத்திற்கு மாறான முறையில் பெறப்படும் பெறுகைகள், பயன்கள் அல்லது நிதியங்களுக்கு சட்ட ரீதியான தோற்றப்பாடொன்றினை உருவாக்குவதேயாகும்.

- பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலானது சட்ட ரீதியாக அல்லது சட்டத்திற்கு முரணான முறையில் பெறப்படும் பணப்பெறுகைகள், இலாபங்கள் அல்லது நிதியத்துடன் தொடர்புபட்டதாகும். குறிக்கோளானது அவற்றைப் பயங்கரவாதத்திற்கு அல்லது பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதியிடப் பயன்படுத்துவதேயாகும்.
- பணம் தூயதாக்குவோரும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவோரும் சட்டத்திற்கு மாறான முறையில் ஈட்டிய பெறுகைகளை தூயதாக்குவதற்கும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதற்கும் சட்ட ரீதியான நிதியியல் முறைமையிலுள்ள பலயீனத்தினைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

## பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுக்கெதிராக நாம் ஏன் போராட வேண்டும்?

- பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இரண்டும் நிதியியல் முறைமை முழுவதனையும் ஊழல் மயப்படுத்துவதன் மூலம் முழுச் சமுதாயத்திற்கும் பொருளாதாரத்திற்கும் பொதுவாக நாட்டிற்கும் பிரதிகூலமான விளைவுகளைக் கொண்டுவரும். இந்நடவடிக்கைகள் உண்மையான வியாபாரம் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் அநுகூலங்களை ஒடுக்கிவிடும்.
- இறுதியில், முழுச் சமூகமும் பன்னாட்டுத் தடைகள், வெளிநாட்டு முதலீடுகளை இழத்தல் போன்றவற்றிற்குட்படுவதன் மூலம் பல்வேறுபட்ட துன்பங்களுக்கு ஆளாக வேண்டியிருக்கும்.

## இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் பற்றி தெரிந்திருப்பது ஏன் அவசியம்?

- இரத்தினக்கற்களும் ஆபரணமும் பணம் தூயதாக்குவோருக்கும் அதேபோன்று பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதற்குப் பயன்படுத்தப்படுவதற்கும் மிகவும் கவர்ச்சிகரமான சாதனங்களாகவுள்ளமை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகக் காணப்படுகிறது.
- இரத்தினக்கற்களும் ஆபரணங்களும் அதேபோன்று தங்கமும் காசாக மாற்றிக் கொள்வதற்கு இலகுவானவையாகவுள்ள அதேவேளையில் கொடுக்கல்வாங்கலின் அநாமதேயத்தன்மையினையும் பாதுகாத்துக் கொள்ளமுடிகிறது. இப்பின்னணியில் பணம் தூயதாக்குவோரிடையேயும் அதேபோன்று பயங்கரவாத நடவடிக்கைகளுக்காகவும் இரத்தினக்கற்கள் ஆபரணங்கள் மற்றும் தங்கத்திற்கு மிக உயர்ந்த கேள்வி காணப்படுகிறது.

- இரத்தினக்கற்கள் ஆபரணங்கள் அதேபோன்று தங்கம் என்பன அவற்றின் அளவு மற்றும் தன்மை என்பனவற்றின் காரணமாக எடுத்துச் செல்லவும் கொண்டு செல்லவும் மிக இலகுவானதாகும். ஆகவே, பணம் தூயதாக்குவோரும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்போரும் இரத்தினக்கல் அல்லது ஆபரணங்களை நாட்டிற்கு நாடு அல்லது பிரதேசத்திற்குப் பிரதேசம் கொண்டு செல்வதன் மூலம் அவர்களது சட்ட பூர்வமற்ற பெறுகைகளை தூய்மைப்படுத்திக் கொள்ளும் அநுகூலங்களைக் கொண்டிருக்கின்றனர்.
- தங்கத்தின் நியதிகளில், இது பன்னாட்டு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நாணயமாகக் கருதப்படுவதன் காரணமாக விசேடமாக தங்கம் மக்களின் கலாச்சாரத்திலும் சமூகத்திலும் இன்றியமையாததொரு அங்கமாக விளங்கும் நாடுகளில் பணம் தூயதாக்குபவரின் சட்டபூர்வமற்ற வருவாய்களை தங்கத்தில் முதலீடு செய்வது இலகுவானதும் அதேபோன்று இலாபம் மிக்கதுமாகக் காணப்படுகிறது.

## இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் வழிமுறைகளைக் கொண்டிருக்க வேண்டுமென ஏன் தேவைப்படுத்தப்படுகின்றனர்?

- இரத்தினக்கற்களை அல்லது ஆடம்பரமான ஆபரணப்பொருட்களைக் கொள்வனவு செய்வது போன்ற சட்டபூர்வமான வியாபாரங்களைப் பயன்படுத்தி சட்டத்திற்கு மாறான பெறுகைகளை சட்டபூர்வமான பெறுகைகளாக மாற்றிக் கொள்வதும் பயங்கரவாதத்திற்கு அல்லது ஏதேனும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதியளிப்பதும் சட்டத்திற்கு முரணானவையாக இருப்பதனால் அவை சட்டபூர்வமான சந்தைப் பொருளாதாரங்களுக்கு தீங்குபயப்பனவாகவுள்ளன.
- பணம் தூயதாக்கலும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலும் உலகளாவிய நிதியியல் சந்தையினை சேதப்படுத்தி விடுமென்பதனால் அதற்கெதிராக ஒவ்வொரு நாடும் செயற்படுவதற்கு இணங்கிக் கொள்ள வேண்டும் என்ற உலகளாவிய நியமம் காணப்படுகின்றது.
- எனவே, 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின்படி, இலங்கையில் பெறுமதிமிக்க உலோகங்களின் வர்த்தகத்திலுள்ள வணிகர்கள் மற்றும் 1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரச்சட்டத்தினால் உள்ளடக்கப்பட்ட உலோகம் மற்றும் கற்கள் உட்பட ஆனால் அதற்கு மட்டும் வரையறுக்கப்பட்டிராத பெறுமதிமிக்க மற்றும் ஓரளவு பெறுமதிமிக்க கற்களின் வணிகத்திலுள்ள வர்த்தகர்களும் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதற்கெதிரான குறிப்பிட்ட வழிமுறைகளை எடுக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

## இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கியமான பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் வழிமுறைகள் யாவை?

- இணங்குவிப்பு அலுவலரை நியமித்தல்: இரத்தினக்கல் மற்றும் ஆபரண நிறுவனத்தின் பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் வழிமுறைகளைக் காத்திரமான விதத்தில் நடைமுறைக்கிடப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக இணங்குவிப்பு அலுவலர் என அழைக்கப்படும் அலுவலரொருவரை நியமிக்குமாறு இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். நியமிக்கப்பட்ட இணங்குவிப்பு அலுவலர் மூத்த முகாமைத்துவ மட்டத்தில் பணிபுரிபவராகவும் நிறுவனத்தின் பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் இணங்குவிப்புத் தேவைப்பாடுகளைக் காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்புடையவராகவும் இருத்தல் வேண்டும். இணங்குவிப்பு அலுவலர் அவரது அல்லது அவளது பொறுப்புக்களைக் காத்திரமான முறையில் நிறைவேற்றுவதற்குத் தேவையான அதிகாரங்களையும் மூலவளங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

- பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலுக்கான கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளைக் கொண்டிருத்தல்: இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் அவர்களது வியாபாரங்களின் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளை மதிப்பிடுவதற்காகவும் தணிப்பதற்காகவும் எழுதப்பட்ட, முகாமைத்துவத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளைக் கட்டாயமாக நிறுவியிருத்தல் வேண்டும். இடர்நேர்வு மதிப்பிடு என்பது நிறுவனம் எதிர்கொள்கின்ற பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் தொடர்பான சாத்தியமான அச்சுறுத்தலையும் பாதிக்கப்படக்கூடிய தன்மையினையும் பகுப்பாய்வு செய்வதாகும்.

- வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்ளுதல்: தொடர்பான இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் இலங்கை ரூபா அல்லது ஐக்கிய அமெரிக்க டொலர் 15,000 இற்குச் சமனான ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அல்லது ஐக்கிய அமெரிக்க டொலரில் வாடிக்கையாளருடன் ஏதேனும் காசுக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் பொழுது இருந்திட்டொன்றான மற்றும் ஒரே தடவையிலான வாடிக்கையாளர்கள் உட்பட, வாடிக்கையாளர் மற்றும் பயன்பெறும் சொந்தக்காரர் மீது வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்ளுமாறு தேவைப்படுத்தப்படுகின்றனர்.

- சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்: இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் பணம் தூயதாக்கல் அல்லது பயங்கரவாதத்திற்கு நியதிளித்தல் தொடர்பிலான கொடுக்கல்வாங்கல்களில் ஏதேனும் சந்தேகங்கள் இருக்குமாயின் நிறைவு பெற்றுவிட்ட கொடுக்கல்வாங்கல்கள் அதேபோன்று எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மீதான சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினைச் சமர்ப்பித்தல் வேண்டும். சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள், 2017 ஏப்பிறல் 21ஆம் திகதியிடப்பட்ட இல: 2015/56 கொண்ட வர்த்தமானியில் (அதிவிசேடம்) காணப்படும் (அட்டவணை V) 2017ஆம் ஆண்டின் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கலில் (படிவம்) ஒழுங்குவிதிகளில் விபரிக்கப்பட்டவாறான படிவத்தினைப் பயன்படுத்தி சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இப்படிவத்தினை மூலம் www.fiusrilanka.gov.lk. பதிவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.

- பதிவேடுகளைப் பேணுதல்: இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு பதிவேடுகளைப் பேணுவதற்காக முறைமையொன்றினைக் கைக்கொள்வதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இது தேவைப்படும் அல்லது நிதியியல் உளவறிதல் பிரிவினால் கேட்டுக் கொள்ளப்படும் பொழுது தரவுகளை இலகுவாகவும் விரைவாகவும் சீர்ப்படுத்திக் கொள்வதற்கு உதவும்.

- ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைத் தீர்மானத்துடனான இணங்குவிப்பு: பயங்கரவாதம், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் பாரிய சேதங்களை விளைவிக்கும் ஆயுதப்பெருக்கம் மற்றும் அதன் நிதியிடல் தொடர்பாக இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகள் மீதான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையினால் குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்கள் இருக்கின்றனவா என்பது தொடர்பில் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் தமது வாடிக்கையாளர்களைப் பரிசோதித்துப் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

**இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்களுக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பற்றிய இணங்குவிப்பு வழிமுறைகள் பற்றி விபரமாகத் தெரிந்து கொள்ள நிதியியல் உளவறிதல் பிரிவினைத் தொடர்பு கொள்ளவும்.**

## கூடுதலான தகவல்களை நீங்கள் எங்கே பெற்றுக்கொள்ள முடியும்?


**பணிப்பாளர், நிதியியல் உளவறிதல் பிரிவு,**
**இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01**

**0112398725**
**0112477125**

**www.fiusrilanka.gov.lk**

**0112477692/2477722**

**fiudnfbp@cbsl.lk**


මූල්‍ය බුද්ධි ඒකකය
நிதியியல் உளவறிதல் பிரிவு
FINANCIAL INTELLIGENCE UNIT

## இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கியமான பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் வழிமுறைகள் யாவை?

- இணங்குவிப்பு அலுவலரை நியமித்தல்: இரத்தினக்கல் மற்றும் ஆபரண நிறுவனத்தின் பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் வழிமுறைகளைக் காத்திரமான விதத்தில் நடைமுறைக்கிடப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக இணங்குவிப்பு அலுவலர் என அழைக்கப்படும் அலுவலரொருவரை நியமிக்குமாறு இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். நியமிக்கப்பட்ட இணங்குவிப்பு அலுவலர் மூத்த முகாமைத்துவ மட்டத்தில் பணிபுரிபவராகவும் நிறுவனத்தின் பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் இணங்குவிப்புத் தேவைப்பாடுகளைக் காத்திரமான முறையில் நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்புடையவராகவும் இருத்தல் வேண்டும். இணங்குவிப்பு அலுவலர் அவரது அல்லது அவளது பொறுப்புக்களைக் காத்திரமான முறையில் நிறைவேற்றுவதற்குத் தேவையான அதிகாரங்களையும் மூலவளங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.
- பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலுக்கான கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளைக் கொண்டிருத்தல்: இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் அவர்களது வியாபாரங்களின் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளை மதிப்பிடுவதற்காகவும் தணிப்பதற்காகவும் எழுதப்பட்ட, முகாமைத்துவத்தினால் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளைக் கட்டாயமாக நிறுவியிருத்தல் வேண்டும். இடர்நேர்வு மதிப்பிடு என்பது நிறுவனம் எதிர்கொள்கின்ற பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் தொடர்பான சாத்தியமான அச்சுறுத்தலையும் பாதிக்கப்படக்கூடிய தன்மையினையும் பகுப்பாய்வு செய்வதாகும்.
- வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்ளுதல்: தொடர்பான இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் இலங்கை ரூபா அல்லது ஐக்கிய அமெரிக்க டொலர் 15,000 இற்குச் சமனான ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அல்லது ஐக்கிய அமெரிக்க டொலரில் வாடிக்கையாளருடன் ஏதேனும் காசுக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் பொழுது இருந்திட்டொன்றான மற்றும் ஒரே தடவையிலான வாடிக்கையாளர்கள் உட்பட, வாடிக்கையாளர் மற்றும் பயன்பெறும் சொந்தக்காரர் மீது வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்ளுமாறு தேவைப்படுத்தப்படுகின்றனர்.
- சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்: இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் பணம் தூயதாக்கல் அல்லது பயங்கரவாதத்திற்கு நியதிளித்தல் தொடர்பிலான கொடுக்கல்வாங்கல்களில் ஏதேனும் சந்தேகங்கள் இருக்குமாயின் நிறைவு பெற்றுவிட்ட கொடுக்கல்வாங்கல்கள் அதேபோன்று எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மீதான சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கையினைச் சமர்ப்பித்தல் வேண்டும். சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல் அறிக்கைகள், 2017 ஏப்பிறல் 21ஆம் திகதியிடப்பட்ட இல: 2015/56 கொண்ட வர்த்தமானியில் (அதிவிசேடம்) காணப்படும் (அட்டவணை V) 2017ஆம் ஆண்டின் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கலில் (படிவம்) ஒழுங்குவிதிகளில் விபரிக்கப்பட்டவாறான படிவத்தினைப் பயன்படுத்தி சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இப்படிவத்தினை மூலம் www.fiusrilanka.gov.lk. பதிவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.
- பதிவேடுகளைப் பேணுதல்: இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு பதிவேடுகளைப் பேணுவதற்காக முறைமையொன்றினைக் கைக்கொள்வதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இது தேவைப்படும் அல்லது நிதியியல் உளவறிதல் பிரிவினால் கேட்டுக் கொள்ளப்படும் பொழுது தரவுகளை இலகுவாகவும் விரைவாகவும் சீர்ப்படுத்திக் கொள்வதற்கு உதவும்.
- ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைத் தீர்மானத்துடனான இணங்குவிப்பு: பயங்கரவாதம், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் பாரிய சேதங்களை விளைவிக்கும் ஆயுதப்பெருக்கம் மற்றும் அதன் நிதியிடல் தொடர்பாக இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகள் மீதான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையினால் குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்கள் இருக்கின்றனவா என்பது தொடர்பில் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் தமது வாடிக்கையாளர்களைப் பரிசோதித்துப் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

**இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்களுக்கான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பற்றிய இணங்குவிப்பு வழிமுறைகள் பற்றி விபரமாகத் தெரிந்து கொள்ள நிதியியல் உளவறிதல் பிரிவினைத் தொடர்பு கொள்ளவும்.**

### கூடுதலான தகவல்களை நீங்கள் எங்கே பெற்றுக்கொள்ள முடியும்?


**பணிப்பாளர், நிதியியல் உளவறிதல் பிரிவு,**
**இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01**

0112398725
0112477125

www.fiusrilanka.gov.lk

0112477692/2477722

fiudnfbp@cbsl.lk

මූල්‍ය බුද්ධි ඒකකය
நிதியியல் உளவறிதல் பிரிவு
FINANCIAL INTELLIGENCE UNIT


# இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்களுக்கான தகவல் துண்டுப்பிரசுரம்



## பணம் தூயதாக்கலைத் தடைசெய்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்

இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு

## நிதியியல் உளவறிதல் பிரிவு என்றால் என்ன?

- 2006ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட நிதியியல் உளவறிதல் பிரிவு - இலங்கை, நிதி அமைச்சின் கீழ் சுயாதீனமான நிறுவனமொன்றாக விளங்குவதுடன், 2007ஆம் ஆண்டிலிருந்து நிருவாக ஏற்பாடுகளுக்காக இலங்கை மத்திய வங்கியின் கீழ் தொழிற்பட்டு வருகின்றது.
- இது, பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் செயற்பாடுகளுக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உச்ச நிறுவனமாகத் தொழிற்படுகின்றது.
- நிதியியல் உளவறிதல் பிரிவானது இலங்கையின் நிதியியல் சந்தையிலும் அதேபோன்று நிதியல்லா சந்தைகளிலுமுள்ள ஏனைய தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்துநர்கள் மற்றும் உரிமம் வழங்குகின்ற நிறுவனங்கள் மற்றும் நாட்டிலுள்ள சட்டத்தினை நடைமுறைக்கிடும் முகவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன், உலகளாவிய ரீதியில் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் நியமங்கள்/ விதந்துரைப்புக்களின் காத்திரமான நடைமுறைப்படுத்தலுக்காகச் செயற்படுகின்றது.

## பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் என்றால் என்ன?

- பணம் தூயதாக்கல் என்பது குற்ற நடவடிக்கைகளிலிருந்தான பெறுகைகள், பயன்கள் அல்லது நிதியங்களின் மூலத்தினை மறைப்பதற்கு குற்றவாளிகள் முயற்சிக்கின்ற செயன்முறையொன்றாகும். அவர்கள் வழக்குத் தொடுத்தல், குற்றத் தீர்ப்பளித்தல் அல்லது குற்றவியல் நிதியங்கள் அல்லது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுவதனைத் தவிர்ப்பதற்காக குற்றங்களுடன் தொடர்புபட்ட பெறுகைகளை தூயதாக்கும் செயன்முறையில் ஈடுபடுகின்றனர்.
- பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் என்பது பயங்கரவாத நடவடிக்கைகளுக்காக தனிப்பட்டவர்களுக்கு அத்துடன்/ அல்லது குழுவினருக்கு நிதியியல் உதவியினை வழங்குகின்றதொரு நடவடிக்கையாகும். பயங்கரவாதத்திற்கான நிதியளிப்பினை சட்ட ரீதியான, சட்ட ரீதியற்ற அல்லது இரண்டும் இணைந்த பல்வேறு வகையான மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

## பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் என்பனவற்றிற்கிடையிலான வேறுபாடு என்ன?

- பணம் தூயதாக்கலில் நிதியிடல் மூலங்கள் எப்பொழுதும் சட்டத்திற்கு மாறானதாகவும் குற்றவியல் நடவடிக்கையுடன் தொடர்புபட்டதாகவுமே இருக்கின்றன. பணம் தூயதாக்கலின் குறிக்கோள் யாதெனில் சட்டத்திற்கு மாறான முறையில் பெறப்படும் பெறுகைகள், பயன்கள் அல்லது நிதியங்களுக்கு சட்ட ரீதியான தோற்றப்பாடொன்றினை உருவாக்குவதேயாகும்.
- பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலானது சட்ட ரீதியாக அல்லது சட்டத்திற்கு முரணான முறையில் பெறப்படும் பணப்பெறுகைகள், இலாபங்கள் அல்லது நிதியத்துடன் தொடர்புபட்டதாகும். குறிக்கோளானது அவற்றைப் பயங்கரவாதத்திற்கு அல்லது பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதியிடப் பயன்படுத்துவதேயாகும்.
- பணம் தூயதாக்குவோரும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவோரும் சட்டத்திற்கு மாறான முறையில் ஈட்டிய பெறுகைகளை தூயதாக்குவதற்கும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதற்கும் சட்ட ரீதியான நிதியியல் முறைமையிலுள்ள பலயீனத்தினைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

## பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலுக்கெதிராக நாம் ஏன் போராட வேண்டும்?

- பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் இரண்டும் நிதியியல் முறைமை முழுவதனையும் ஊழல் மயப்படுத்துவதன் மூலம் முழுச் சமுதாயத்திற்கும் பொருளாதாரத்திற்கும் பொதுவாக நாட்டிற்கும் பிரதிகூலமான விளைவுகளைக் கொண்டுவரும். இந்நடவடிக்கைகள் உண்மையான வியாபாரம் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் அநுகூலங்களை ஒடுக்கிவிடும்.
- இறுதியில், முழுச் சமூகமும் பன்னாட்டுத் தடைகள், வெளிநாட்டு முதலீடுகளை இழத்தல் போன்றவற்றிற்குட்படுவதன் மூலம் பல்வேறுபட்ட துன்பங்களுக்கு ஆளாக வேண்டியிருக்கும்.

## இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் பற்றி தெரிந்திருப்பது ஏன் அவசியம்?

- இரத்தினக்கற்களும் ஆபரணமும் பணம் தூயதாக்குவோருக்கும் அதேபோன்று பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதற்குப் பயன்படுத்தப்படுவதற்கும் மிகவும் கவர்ச்சிகரமான சாதனங்களாகவுள்ளமை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகக் காணப்படுகிறது.
- இரத்தினக்கற்களும் ஆபரணங்களும் அதேபோன்று தங்கமும் காசாக மாற்றிக் கொள்வதற்கு இலகுவானவையாகவுள்ள அதேவேளையில் கொடுக்கல்வாங்கலின் அநாமதேயத்தன்மையினையும் பாதுகாத்துக் கொள்ளமுடிகிறது. இப்பின்னணியில் பணம் தூயதாக்குவோரிடையேயும் அதேபோன்று பயங்கரவாத நடவடிக்கைகளுக்காகவும் இரத்தினக்கற்கள் ஆபரணங்கள் மற்றும் தங்கத்திற்கு மிக உயர்ந்த கேள்வி காணப்படுகிறது.
- இரத்தினக்கற்கள் ஆபரணங்கள் அதேபோன்று தங்கம் என்பன அவற்றின் அளவு மற்றும் தன்மை என்பனவற்றின் காரணமாக எடுத்துச் செல்லவும் கொண்டு செல்லவும் மிக இலகுவானதாகும். ஆகவே, பணம் தூயதாக்குவோரும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்போரும் இரத்தினக்கல் அல்லது ஆபரணங்களை நாட்டிற்கு நாடு அல்லது பிரதேசத்திற்குப் பிரதேசம் கொண்டு செல்வதன் மூலம் அவர்களது சட்ட பூர்வமற்ற பெறுகைகளை தூய்மைப்படுத்திக் கொள்ளும் அநுகூலங்களைக் கொண்டிருக்கின்றனர்.
- தங்கத்தின் நியதிகளில், இது பன்னாட்டு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நாணயமாகக் கருதப்படுவதன் காரணமாக விசேடமாக தங்கம் மக்களின் கலாச்சாரத்திலும் சமூகத்திலும் இன்றியமையாததொரு அங்கமாக விளங்கும் நாடுகளில் பணம் தூயதாக்குபவரின் சட்டபூர்வமற்ற வருவாய்களை தங்கத்தில் முதலீடு செய்வது இலகுவானதும் அதேபோன்று இலாபம் மிக்கதுமாகக் காணப்படுகிறது.

## இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் பணம் தூயதாக்கலைத் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் வழிமுறைகளைக் கொண்டிருக்க வேண்டுமென ஏன் தேவைப்படுத்தப்படுகின்றனர்?

- இரத்தினக்கற்களை அல்லது ஆடம்பரமான ஆபரணப்பொருட்களைக் கொள்வனவு செய்வது போன்ற சட்டபூர்வமான வியாபாரங்களைப் பயன்படுத்தி சட்டத்திற்கு மாறான பெறுகைகளை சட்டபூர்வமான பெறுகைகளாக மாற்றிக் கொள்வதும் பயங்கரவாதத்திற்கு அல்லது ஏதேனும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதியளிப்பதும் சட்டத்திற்கு முரணானவையாக இருப்பதனால் அவை சட்டபூர்வமான சந்தைப் பொருளாதாரங்களுக்கு தீங்குபயப்பனவாகவுள்ளன.
- பணம் தூயதாக்கலும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலும் உலகளாவிய நிதியியல் சந்தையினை சேதப்படுத்தி விடுமென்பதனால் அதற்கெதிராக ஒவ்வொரு நாடும் செயற்படுவதற்கு இணங்கிக் கொள்ள வேண்டும் என்ற உலகளாவிய நியமம் காணப்படுகின்றது.
- எனவே, 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின்படி, இலங்கையில் பெறுமதிமிக்க உலோகங்களின் வர்த்தகத்திலுள்ள வணிகர்கள் மற்றும் 1993ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரச்சட்டத்தினால் உள்ளடக்கப்பட்ட உலோகம் மற்றும் கற்கள் உட்பட ஆனால் அதற்கு மட்டும் வரையறுக்கப்பட்டிராத பெறுமதிமிக்க மற்றும் ஓரளவு பெறுமதிமிக்க கற்களின் வணிகத்திலுள்ள வர்த்தகர்களும் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதற்கெதிரான குறிப்பிட்ட வழிமுறைகளை எடுக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றனர்.